ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

# பதவி வெற்றிடம்
# செயலாளர் (ஒப்பந்த அடிப்படை)

***தினமின, தினகரன்*** மற்றும் ***டெய்லி நியூஸ்*** செய்திப் பத்திரிகைகளில் 2025.10.23 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள விளம்பரத்தின் பிரகாரம் **இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால்** தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் அனுபவமுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து **செயலாளர் (ஒப்பந்த அடிப்படை) பதவிக்காக** விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **தகைமைகள் : (1 அல்லது 2 அல்லது 3)**

1. சட்டம் /சமூக விஞ்ஞானம் /முகாமைத்துவம் அல்லது ஏனைய தொடர்புடைய துறையொன்றில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது சட்டத்தரணியொருவராக இருத்தல்.

**அத்துடன்**

சட்டம் /சமூக விஞ்ஞானம் /முகாமைத்துவம் அல்லது ஏனைய தொடர்புடைய துறையொன்றில் பட்டப்பின் படிப்பு தகைமையை (முதுமாணி) அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவ நிறுவனமொன்றின் அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

குறைந்தது முகாமைத்துவ மட்டத்தில் 20 வருட கால அனுபவம் மற்றும் அதில் 05 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் அனுபவம், அரச அல்லது மாகாண அரச சேவை, கூட்டுத்தாபனம், நியதிச் சட்ட சபை / நிறுவனம் அல்லது பிரசித்தி பெற்ற தனியார் நிறவனமொன்றில் நம்பகரமான வரலாறைக் கொண்டிருத்தல்.

2. தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டய நிறுவனமொன்றில் பூரண அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

15 வருட கால சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில், அரச அல்லது மாகாண அரச சேவை, கூட்டுத்தாபனம், நியதிச் சட்ட சபை / நிறுவனம் அல்லது பிரசித்தி பெற்ற தனியார் நிறுவனமொன்றில் அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

3. சட்டம் /சமூக விஞ்ஞானம் /முகாமைத்துவம் அல்லது ஏனைய தொடர்புடைய துறையொன்றில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது சட்டத்தரணியொருவராக இருத்தல்.

**மற்றும்**

சட்டம் /சமூக விஞ்ஞானம் /முகாமைத்துவம் அல்லது ஏனைய தொடர்புடைய துறையொன்றில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

ஆரம்ப பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் குறைந்தது 05 வருட கால சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் அனுபவம், அரச அல்லது மாகாண அரச சேவை, கூட்டுத்தாபனம், நியதிச் சட்ட சபை / நிறுவனம் அல்லது பிரசித்தி பெற்ற தனியார் நிறவனமொன்றில் நம்பகரமான சேவை வரலாறைக் கொண்டிருத்தல்.

**குறிப்பு :** **மனித உரிமைகள் துறை பற்றிய அறிவைக் கொண்டிருத்தல் விசேட தகைமையொன்றாக கவனத்திற்கொள்ளப்படும்.**

**2. சம்பளம் :** ரூ.161,140 - 12x 4,850 - 219,340 (HM 2-1-2025)

01/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கமைய 2025.01.01 ஆம் திகதியன்று தொடர்புடைய ஆரம்ப சம்பளம் ரூ. 119,494/- + வாழ்க்கைச் செலவுப் படி ரூ.17,800/- (ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பளம் 03/2018 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கைக்கமைய தீர்மானிக்கப்படும்.)

**3. ஏனையவை :**

ஒவ்வொரு விண்ணப்பதாரிகளும்,

i. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
ii. **35 வயதிலும் குறையாத மற்றும் 55 வயதிலும் அதிகரிக்காதிருத்தல் வேண்டும்** (ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோகத்தர்கள் 65 வயதிலும் அதிகமானவர்களாக இருத்தலாகாது.)
iii. பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குப் பொருத்தமான உடல் மற்றும் உள ரீதியான ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
iv. நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

**4. ஆட்சேர்ப்பு முறை :-**

நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும்.

**5. நேர்முகப் பரீட்சை:**

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு புள்ளிகள் வழங்கப்படும்:

| | |
|---|---|
| தொடர்புடைய மேலதிக அனுபவம் | - 30 புள்ளிகள் |
| தொடர்புடைய மேலதிக கல்வி / தொழில் தகைமைகள் | - 30 புள்ளிகள் |
| ஏனைய அடைவுகளள் | - 15 புள்ளிகள் |
| நேர்முகத் தேர்வின்போது காண்பிக்கும் திறமை | - 25 புள்ளிகள் |
| | **100புள்ளிகள்** |

நேர்முகப் பரீட்சையின்போது பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் அடிப்படையில் மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

**<u>பொதுவான வழிகாட்டல்கள் :</u>**

1. நியமனத்தைப் பெற்றுக்கொள்பவர்களுக்கு **ஊழியர் சேமலாப நிதியம்** மற்றும் **ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான** பங்களிப்பு உரிமையுண்டு.
2. தற்போது **அரச சேவையில் / கூட்டுத்தாபனமொன்றில் / நியதிச் சட்ட சபையொன்றில்** பணியாற்றுகின்ற விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத் தலைவரூடாக விண்ணப்பித்தல் வேண்டுமென்பதோடு, குறித்த நபர் இந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிப்பதற்கு முடியுமென நிறுவனத் தலைவர் பரிந்துரைத்தல் வேண்டும்.
3. தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் அதற்கிணங்க சுருக்கப் பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.
4. தகைமைகள் மற்றும் அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்தனுப்புதல் வேண்டும்.
5. **விண்ணப்ப இறுதித் திகதிக்கு முன்னர்** தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமே தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்களாகக் கருதப்படுவார்கள்.
6. நியமன அதிகாரி, **மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் சபையாகும்.**

கல்வித் தகைமைகள், தொழில் தகைமைகள், அனுபவம் மற்றும் ஏனைய அனைத்து விபரங்களும் உள்ளடக்கப்பட்ட சுய விபரக் கோவையுடனான (CV) விண்ணப்பங்களை **உறவினர் அல்லாத இருவரின் பரிந்துரைகளுடன் "தவிசாளர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இலக்கம் 14, ஆர்.ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 04"** எனும் முகவரிக்கு பதவுத் தபாலில் **2025.11.10** ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"செயலாளர் பதவிக்கு (ஒப்பந்த அடிப்படை) விண்ணப்பித்தல்"** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**தவிசாளர்,**
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.
2025.10.23